सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

முனைவர் **கிரண் பேடி** அவர்கள்

# புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

26 மார்ச், 2018




கணகனேரி, புதுச்சேரி

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

முனைவர் **கிரண் பேடி** அவர்கள்

**புதுச்சேரி சட்டப்பேரவையில்**

**ஆற்றிய உரை**

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**

**கோடாமை சான்றோர்க்கு அணி. -குறள்**

***மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே! மேன்மைமிகு இந்த அவையின் புகழ்மிக்க உறுப்பினர்களே!***

**வணக்கம்!**

**பு**துச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் இந்த அரசின் மூன்றாவது கூட்டத்தொடரில் உரையாற்ற இங்கு வந்திருப்பதில் நான் உண்மையில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த அரசு, வீட்டுவசதி, குறைந்த செலவில் மருத்துவ சேவை, பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிப்பிட வசதி மற்றும் தடையற்ற தரமான மின்சக்தி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சமுதாயத்தில் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு அரசின் திட்டப் பயன்களை முழுமையாகக் கொண்டு செல்வதற்கு உள்ளார்ந்த முயற்சியினை மேற்கொண்டு தங்களது பங்களிப்பினைச் செய்துள்ள அனைவரையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

2. புதுச்சேரி மக்களின் நியாயமான மற்றும் முறையான தேவைகளை நிறைவேற்றுவதில் இந்த அரசு மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. மக்களின் நியாயமான விருப்பங்களை நிறைவேற்றுவதில் மாநிலத்தின் வளஆதாரங்கள் திறம்படப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்திடும் வகையில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. புதுச்சேரி அரசின் நிதி ஆதாரங்களின் பெரும்பகுதி சம்பளங்கள், ஓய்வூதியம் மற்றும் கடன் சேவைகள் உள்ளிட்ட தவிர்க்க முடியாத செலவினங்களுக்காக செலவிடப்படுகிறது. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் தகுதியுள்ளவர்களுக்கு வழங்கப்படும் தவிர்க்க இயலாத செலவினங்கள்மீது சமரசம் செய்துகொள்ளாமல், இந்த அரசால் எடுக்கப்பட்ட சரியான நேரத்திலான நிதிச்சிக்கன நடவடிக்கைகள் பாராட்டத்தக்கதாகும். இவ்வரசு, அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை ஏற்பது குறித்து மிகுந்த கவனம் செலுத்திவருகிறது என்பதை அனைவரும் நன்கு அறிவீர்கள். மத்திய அரசு கொண்டுவந்துள்ள சரக்கு மற்றும் சேவை வரி (GST) புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

**4.** குளங்களையும், ஏரிகளையும் தூர்வாருவதில் இந்த அரசால் எடுக்கப்பட்ட முயற்சிகளின் காரணமாக பலபகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது என்பதை இந்த மேன்மைமிகு அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நீர்நிலைகளைப் பாதுகாக்கும்பொருட்டு அரசு, இவ்வாட்சிப்பரப்பில் தற்போது மொத்தமுள்ள 84 ஏரிகளில் 20 ஏரிகளைத் தூர்வாரும் பணியை இவ்வரசு தொடங்கியுள்ளது. சுற்றுச்சூழலைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்க அரசு உறுதிபூண்டுள்ளது.

**5.** நிதிநிலையைப் பொறுத்தவரையில், நடப்பாண்டின் திட்டச் செலவினம் ₹ 2,334 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 2016-17ஆம் ஆண்டின் திட்டச் செலவினங்களைவிட 11.67 விழுக்காடு அதிகம் ஆகும். கடந்த காலங்களில் வாங்கப்பட்ட கடன் தொகையைத் திரும்ப செலுத்தவேண்டியிருப்பதால் இவ்வாட்சிப்பரப்பு நிதிச்சுமையை எதிர்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். தற்போது, நமது கடன் சுமையைக் குறைப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதால், இந்த அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

**6.** மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GSDP) நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கண்டறிவதற்கு ஒரு முக்கியமான அளவீடு என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விழைகின்றேன். 2017-18ஆம் ஆண்டுக்கான இவ்வாட்சிப்பரப்பின் GSDPயானது ₹ 30,845.43 கோடி (நடப்பு விலை) என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டின் GSDP மதிப்பான ₹ 27,586.09 கோடியைவிட (நடப்பு விலை) 11.82 விழுக்காடு அதிகமாகும். 2016-17ஆம் ஆண்டில் ₹ 1,73,687ஆக (நடப்பு விலை) இருந்த புதுச்சேரியின் தனிநபர் வருமானம் 2017-18ஆம் ஆண்டில் ₹ 1,89,124ஆக உயர்ந்துள்ளது. இது சென்ற ஆண்டைவிட 8.89 விழுக்காடு அதிகம் ஆகும். GSDP வளர்ச்சியானது இவ்வாட்சிப்பரப்பின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

**7.** இந்த அறிமுகத்துடன் இவ்வரசு நடப்பு நிதியாண்டில் வெவ்வேறு துறைகளின்கீழ் செயல்படுத்தப்பட்ட முக்கிய திட்டங்கள் சிலவற்றை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

**வேளாண்மை**

**8.** வேளாண் துறையை பலப்படுத்துவதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக வேளாண் துறைக்கு இந்த அரசு உரிய ஆதரவை அளித்துவருகிறது என்பதை மாண்புமிகு

உறுப்பினர்கள் நன்கு அறிவர். 8,933 விவசாயிகளுக்கு ₹ 3 கோடி அளவிற்கு சம்பா பருவத்துக்கான மானியம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் விதைகள், உரங்கள், உயிரி-பூச்சிக்கொல்லி மருந்து முதலிய வேளாண் இடுபொருள்களுக்கும் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலையில் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, 600 விவசாயிகளுக்கு தோட்டக்கலையில் முன்-பருவப்பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், ஆர்வமுள்ள மக்களுக்கு தேனீ வளர்ப்பு, மாடித்தோட்டக் காய்கறி வளர்ப்பு பயிற்சி நடத்தப்பட்டு தேனீ வளர்ப்புக் கருவிகளும் அளிக்கப்பட்டன. திசு வளர்ப்புப் பரிசோதனைக்கூடம் அமைப்பதற்காக, பண்டித ஜவகர்லால் நேரு வேளாண் கல்லூரிக்கு (PAJANCOA) ₹ 20 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துறையானது, மாடித்தோட்டப் பூங்கா அமைப்பதற்காக 50 விழுக்காடு மானிய விலையில் வேளாண் சாகுபடி உபகரணத் தொகுப்பினை வழங்கிவருகிறது.

**9.** புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் வட்டாரப் பகுதிகளில் பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டுத் திட்டம் (PMFBY) அமுல்படுத்தப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களில் காப்பீட்டு கட்டணத்தை விவசாயிகளே செலுத்துகின்றனர். ஆனால், விவசாயிகளுக்கான பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மத்திய மற்றும் மாநில அரசின் பங்கைத் தவிர, விவசாயிகளின்

காப்பீட்டு கட்டண பங்கையும் புதுச்சேரி அரசே செலுத்துகிறது என்பதை இந்த அவையில் உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அறிவிக்கப்பட்ட பயிர்களான நெல், கரும்பு, பருப்பு வகைகள் மற்றும் பருத்தி ஆகியவற்றை பயிரிடுவதற்கும் இவ்வரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

**10.** வடகிழக்குப் பருவமழைக் காலத்தின்போது பற்றாக்குறையான மழைப்பொழிவு, சரிசம நிலையற்ற மழைப்பொழிவு மற்றும் போதிய அளவு காவிரி நீர் வராமை ஆகியவற்றின் விளைவாக புதுச்சேரி மற்றும் காரைக்கால் வட்டாரப் பகுதிகள் வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. தேசிய பேரிடர் நிவாரண நிதி (NDRF) நெறிமுறைகளுக்கிணங்க பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ₹ 13 கோடி இடுபொருள் மானியம் வழங்கப்பட்டது.

**11.** மண்வள அட்டைத் திட்ட அறிமுகமானது விவசாயிகள் தங்களின் நிலத்தின் மண்வளத் தரத்தை அறிந்துகொள்வதற்கு உதவுகிறது. GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மண்மாதிரி திரட்டப்படுவதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்படுகிறது. இதற்காக டாக்டர் M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக கிராமங்களிலிருந்து 3,000 மண் மாதிரிகள் திரட்டப்பட்டுள்ளன.

**12.** நீர்வள ஆதாரத் திட்டம் மற்றும் மேலாண்மைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக, பிரதம மந்திரி வேளாண் நீர்பாசனத் திட்டத்தின்கீழ், (PMKSY) புதுச்சேரி மற்றும் காரைக்காலுக்கு மாவட்ட நீர்ப்பாசன திட்டங்கள் (DIP) நபார்டு கன்சல்டன்சி சர்வீஸ் (NABCONS) நிறுவனத்தால் தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று நிதி உதவி கோரப்பட்டுள்ளது. பாசனத்திற்காக நீர்வள ஆதாரத்தைப் பெருக்குவதற்கு இந்த அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கோரியுள்ளது.

**கால்நடைப் பராமரிப்பு**

**13.** இந்த அரசு, கால்நடை நலம் மற்றும் உற்பத்தித் திறனை உறுதிசெய்வதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது. கால்நடைச் சேவைகள் அனைத்தும் கால்நடை மருத்துவ மையங்களின் மூலம் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன.

**14.** பால் உற்பத்தி மற்றும் கால்நடைகளின் சுகாதார நிலையை தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரியத்தால் NDDB உருவாக்கப்பட்ட கால்நடை உற்பத்தித் திறன் மற்றும் நலனுக்கான தகவல் வலைப்பின்னல் (INAPH) மூலம் கண்காணிப்பதற்காக, புதுச்சேரியில் பால்தரும் கறவை மாடுகள் உள்ளிட்ட

இனப்பெருக்கக் கால்நடைகளுக்கும் 12 இலக்க தனித்திறன் எண் (UID) கொண்ட காலச்சான்று அட்டைகளை அளிக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. வீட்டுப் புழக்கடை கோழி உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, கிரிராஜா மற்றும் கிரிராணி கோழிகள் அரசு கோழிப் பண்ணையில் வளர்க்கப்பட்டு அவை 50 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வரசு, அதிக பால் தரும் கறவை மாடுகளைக் கூடுதலாக வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**15.** விவசாயிகளுக்கிடையே கால்நடை வளர்ப்பில் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டும் விவசாயிகள் தாங்கள் அறிந்த செய்திகளை மேம்படுத்தும் வகையிலும், ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரியின் (RIVER) கூட்டு முயற்சியுடன் 7 நாட்கள் செயல்திறன் சார்ந்த தொடர் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. கால்நடைகளுக்கு சிறந்த சுகாதாரப் பாதுகாப்புச் சேவைகளை அளிக்கும்பொருட்டு, புதுச்சேரியில், கால்நடை மருத்துவமனையில் புனரமைப்புப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. கால்நடைக் கல்விக்காக புதுச்சேரி ராஜீவ் காந்தி கால்நடைக் கல்லூரிக்கு (RIVER) மானியத் தொகையாக ₹ 12 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

**கலை மற்றும் பண்பாடு**

**16.** சுற்றுலாத் துறையுடன் இணைந்து கலை நிகழ்ச்சிகள் வார இறுதி நாட்களில் கடற்கரைப் பகுதியில் நடத்தப்பட்டு வருகின்றன. இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. அருங்காட்சியகத்தின் பார்வையாளர்கள் நேரம் உணவு இடைவேளை இன்றி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் நலன்**

**17.** இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து வட்டாரப் பகுதிகளிலும் 2013ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் உணவு தானியங்களுக்கு நேரடிப் பணப் பயன் வழங்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டத்தின்கீழ், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள (AAY) குடும்ப அட்டைதாரர்களுக்கு, அட்டை ஒன்றுக்கு ₹ 933 என்ற வீதத்தில் 35 கிலோ அரிசிக்கான பண மானியமும், வறுமைக் கோட்டிற்குக்கீழுள்ள (BPL) அட்டைதாரர்களுக்கு குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு மாதந்தோறும் ₹ 133 என்ற வீதத்தில் 5 கிலோ அரிசிக்கான பண மானியமும் பயனாளிகளின்

வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது. இவ்வரசு, உணவுப் பாதுகாப்பு சட்டத்தை முழுமையாக செயல்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறது.

**கூட்டுறவு**

**18.** புதுச்சேரி மாநில விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கூட்டுறவு வங்கிகளின் மூலமாக வழங்கப்பட்ட ₹ 19 கோடிக்கான விவசாயக் கடன்களை இவ்வரசு முழுமையாகத் தள்ளுபடி செய்து அறிவித்துள்ளது. இதன்மூலம் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவசாயிகள் மீண்டும் கூட்டுறவு வங்கி மூலம் கடனுதவி பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 4,908 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். புதுச்சேரி மற்றும் காரைக்கால் வட்டாரப் பகுதிகளில் செயல்பட்டுவரும் தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு 75 விழுக்காடு மானிய விலையில் கால்நடைத் தீவனம் வழங்குவதற்காக பாண்லே நிறுவனத்துக்கு ₹ 386 இலட்சம் தொகை அளிக்கப்பட்டுள்ளது. பாண்லே நிறுவனமானது, புதுச்சேரியில் 80 தொடக்கக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் தானியங்கி பால் சேகரிக்கும் பிரிவை அமைப்பதற்காக தேசிய பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ₹ 72 இலட்சம் நிதி உதவியைப் பெற்றுள்ளது. மேலும், 15 தொடக்கக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில்

அதிக கொள்ளளவு உள்ள குளிர்கலன் மற்றும் தானியங்கி பால் சேகரிப்பு பிரிவுகளை அமைப்பதற்காக ₹ 168 இலட்சம் நிதி உதவி பெற்றுள்ளது.

**பள்ளிக்கல்வி**

**19.** இவ்வாட்சிப்பரப்பின் வளர்ச்சியும் எதிர்காலமும் வெகுவாகக் கல்வி முறையின் தரத்தைப் பொறுத்து அமையும் என்பதால், அனைவருக்கும் நல்ல தரமான கல்வி அளிப்பது கட்டாயமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வர். தொடக்கக்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக கணினி சார்ந்த (ICT) பயிற்சி முறையின் மீது அதிக கவனம் செலுத்தி புத்தாக்கப் பயிற்சி கற்பித்தல் முறைகளுடன் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு தொடர் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள அனைத்து அரசுப்பள்ளிகளிலும் “புத்தக வாசிப்புக்கூடம்” அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாணவர்களின் வாசிப்புத் திறன் மேம்பட்டு வருகிறது. 29,589 மாணவர்களுக்கு வருடாந்திர உதவித்தொகையாக ₹ 2 கோடி அளிக்கப்பட்டது. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பெண் பெற்று மேல்நிலைக்கல்வி (HSC) பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ₹ 600 படிப்பு உதவித்தொகையாக

வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் சீரிய முயற்சியின் காரணமாக 2016-17ஆம் கல்வியாண்டின்போது பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 26 அரசு உயர்நிலைப்பள்ளிகள் 100 விழுக்காடு தேர்ச்சிபெற்றுள்ளன என்பதை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**20.** பள்ளிகளில் ஊட்டச்சத்துமிக்க காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் முறையே 65,477 மாணவர்களும், 74,950 மாணவர்களும் பயன்பெற்று வருகின்றனர். உணவுப்பொருட்களை துரிதமாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையிலும் தயார் செய்யும் பொருட்டு, புதுச்சேரி வட்டாரப் பகுதியில் 9 மைய சமையற்கூடங்கள் எரிவாயு சமையற்கூடங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

**21.** அரசு பள்ளிகளில் 100 விழுக்காடு மாணவர் சேர்க்கைக்கும் அவர்களை அரசு பள்ளிகளிலேயே தக்கவைப்பதற்கும் அரசு அதிகபட்ச முக்கியத்துவத்தை அளித்து வருகிறது. இந்த இலக்கை எட்டுவதற்காக, பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பைப் பொருட்படுத்தாமலேயே இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து வட்டாரப் பகுதிகளின் அரசுப்பள்ளிகளில் மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், அரசு நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளில்

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக சீருடைகள், பாடப்புத்தகங்கள், பயிற்சிச் சுவடிகள் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் நடப்புக் கல்வியாண்டில் 1,06,986 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். இதற்காக ₹ 13 கோடி எனது அரசு செலவு செய்துள்ளது. மாணவர்களுக்கான சிறப்புப் பேருந்துகள் சலுகைக் கட்டணத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். புதுச்சேரி வட்டாரப் பகுதியில் 58 மாணவர் சிறப்புப் பேருந்துகளும், காரைக்கால் வட்டாரப் பகுதியில் 13 பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்கு ₹ 6 கோடி செலவிடப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு பள்ளிகளை முன்மாதிரி பள்ளிகளாக (Model School) உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**22.** இவ்வாட்சிப்பரப்பு ஒரு கல்வி மையமாகத் திகழ்ந்து வருகிறது. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் அறிக்கையின்படி புதுச்சேரி யூனியன் பிரதேசம் உயர்கல்வி வழங்குவதில் 5வது இடத்தில் உள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக உயர்கல்வி கற்றலில் சிறப்பு மையமாக உள்ளது. உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின்கீழ், காரைக்காலில் தேசிய தொழில்நுட்பக் கல்வி நிலையம் (NIT), 2 பொறியியல் கல்லூரிகள்,

11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 1 சட்டக் கல்லூரி, 6 பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், 1 கல்வியியல் கல்லூரி ஆகியவற்றைக் கொண்டும், அரசு மற்றும் தனியார் துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்களைக் கொண்டும் புதுச்சேரி தென்மாநிலங்களில் ஓர் அறிவு மையமாகத் திகழ்ந்து வருகிறது. மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு நிதி அளிப்பதன் மூலம் உயர்கல்வி அணுகுதல், சமவாய்ப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக, மத்திய ஊக்க ஆதரவு திட்டமான “தேசிய உயர்கல்வித் திட்டம்” (RUSA) செயல்படுத்த ஏதுவாக புதுச்சேரி மாநில உயர்கல்விக் குழு அமைக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பொறியியல் கல்லூரியைப் புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்வரசு உயர்கல்வியில் தனியார் துறையின் பங்கினை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

**23.** சென்டாக் (CENTAC) மூலம் சேர்க்கை பெறும் மாணவர்களுக்காக “பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவித் திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்கள் தாங்கள் விரும்பிய பாடப்பிரிவுகளைப் படிப்பதற்காக மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2017-18ஆம் கல்வியாண்டிலிருந்து 1,180 சேர்க்கை

இடங்களை உயர்த்தியுள்ளது. காரைக்கால் அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 3 புதிய பட்டமேற்படிப்புப் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

**24.** புதிய முயற்சியாக புதுச்சேரி வட்டாரப் பகுதியில் 10 அரசு கல்லூரிகளில் (கலை மற்றும் அறிவியல், பொறியியல், பல்தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் சட்டக் கல்லூரி) 2017ஆம் ஆண்டு "வழிகாட்டி அமைப்பு முறை" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு பேராசிரியரும் தேர்ந்தெடுத்த 10 முதல் 15 மாணவர்களுக்கு வழிகாட்டியாக அவர்களது கல்வித் திறனை மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு வழிகாட்டுவார்கள். தகவல் பரிமாற்றத் திறன்களை வளர்த்தல், நல்ல பழக்கங்களைப் பயிற்றுவித்தல், மற்றும் அவர்களது ஒட்டுமொத்த திறனைத் மேம்படுத்துவதற்கு வழிகாட்டுவார்கள். இவ்வரசால் எடுக்கப்பட்ட சீரிய முயற்சியின் காரணமாக, இவ்வாட்சிப்பரப்பு "தேசிய உயர்கல்வித் திட்டம்" (RUSA) என்னும் மத்திய அரசின் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மிகச்சிறந்த செயல்திறனாளராகவும் இதில் ஐந்தாம் இடத்திலும் உள்ளது. மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது RUSA திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் ₹ 5 கோடி தொகையை அளித்துள்ளது. புதுச்சேரி பொறியியல் கல்லூரியானது, மத்திய மனிதவள மேம்பாட்டு துறையின்

தொழில்நுட்பக்கல்வி தர மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆலோசனை அளிக்கும் கல்விநிலையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**மின்சாரம்**

**25.** நமது ஆட்சிப்பரப்பு போதிய மின்சக்தியைக் கொண்டுள்ளது. மின்விநியோக மின்தொகுப்பில் உள்கட்டமைப்பு மேம்பாடு மீதான தேவைகளைப் பூர்த்தி செய்வதே தற்போதைய தேவை ஆகும். மேட்டுப்பாளையம் தொழிற்பேட்டையின் தொழில் முனைவோர்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியினரின் நீண்டகாலக் கோரிக்கையான, குரும்பாப்பட்டு 110 K.V. துணைமின் நிலையத்தில் ₹ 6 கோடி செலவில் கூடுதல் 25 MVA மின் மாற்றி நிறுவப்பட்டதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதைப்போலவே, வில்லியனூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியினரின் மின்சார தேவையை பூர்த்திசெய்ய ₹ 6 கோடி செலவில் வில்லியனூர் 110 K.V. துணை-மின் நிலையத்தில் கூடுதலாக 25 MVA மின்மாற்றி நிறுவப்பட்டுள்ளது.

**26.** சூரிய மின்சக்தியை ஊக்குவிக்கும் பொருட்டு கட்டடங்களின் கூரைகளில் 451.80 K.W. சூரிய மின்சக்தியை நிறுவி கட்டமைப்புடன் கூடிய மின்தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. தடையற்ற மின் வழங்கலை

உறுதிசெய்வதற்காக உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட கடற்கரை இயற்கைப் பேரிடர் இன்னல் குறைப்புத் திட்டத்தின்கீழ் (CDRRP) வெங்கட்டா நகர் 110 K.V. துணைமின் நிலையத்திலிருந்து 5 புதிய 11 K.V. நிலத்தடி கம்பிவட மின்னூட்டிகள் ₹ 15 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன. காரைக்கால் சுரக்குடி துணைமின் நிலையத்தில் 3 புதிய மின்சுற்றுவழி பரிகலன்கள் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. மின்சக்தியை சேமிக்கும் கருவியாக LEDஐப் பயன்படுத்துவதை அரசு ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளது.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலன்**

**27.** கடற்கரைப் பகுதிகளில் வாழும் மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு மீன்வளம் முக்கியமானதொரு பங்காற்றுகிறது. அங்கு மீனவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பையும், வாழ்வாதாரத்தையும் பெறுகின்றனர் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். புதுச்சேரியில் உலக வங்கியின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ள நவீன மீன் அங்காடியில் கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகள், சாலையோர / தலையில் சுமந்து மீன் விற்பவர்கள் ஆகியோருக்கும் நிரந்தர மீன் கடைகளை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அரசு, மீன்வளம் மற்றும் மீனவர்

நலனுக்கு முன்னுரிமை அளித்து சுமார் ₹ 33 கோடி செலவில் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மீன்பிடிக் கருவிகளின் கட்டமைப்பைப் பலப்படுத்த, பெரிய படகுகளில் பாதுகாப்பு கருவிகள் பொருத்தவேண்டியது அவசியமாகும்.

**வனம்**

**28.** நீர்நிலைகள், சதுப்பு நிலங்கள் மற்றும் மரங்கள் போன்ற நமது இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு உணர்வார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். இவ்வாட்சிப்பரப்பில், பசுமைச் சூழலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிர்வாகமானது மேம்பாட்டுச் செயல்பாடுகளுக்காக மரம் வெட்ட அனுமதி அளிக்கும்போது மாண்பமை நீதிமன்றத்தின் கட்டளையை உறுதியாகப் பின்பற்றிவருகிறது. மரம் வெட்டும் பயன்பாட்டாளர், தாம் வெட்டும் ஒவ்வொரு மரத்திற்கும் ஈடாக பத்து மரக்கன்றுகளை நடுதல் வேண்டும் என்றும், மேலும் அவர்கள் அவ்வாறு நட்ட மரக்கன்றுகளைத் தொடர்ந்து பாதுகாத்து வருவதற்காக எழுத்துப்பூர்வ உறுதிமொழி அளிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றனர்.

**சுகாதாரம்**

**29.** இந்த அரசு தற்போதிருந்துவரும் மருத்துவமனைகளின் மூலம் சுகாதார மேம்பாடு மற்றும் வருமுன் நோய்த்தடுப்பு குறித்து அதிக கவனம் செலுத்தி, சிறந்த சுகாதாரத்தினை அளிப்பதற்காக சுகாதாரச் சேவைகளை மேம்படுத்த உறுதிபூண்டுள்ளது.

**30.** குழந்தை இறப்பு வீதத்தை குறைப்பதில் யூனியன் பிரதேசங்களுக்கிடையே இவ்வாட்சிப்பரப்பு முதல் இடத்திலும், அனைத்திந்திய அளவில் இரண்டாவது இடத்திலும் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தேசிய அளவில் பச்சிளம் குழந்தை இறப்பு வீதம் ஆயிரத்துக்கு முப்பத்து நான்கு (34 / 1000) ஆக உள்ளது. ஆனால் புதுச்சேரியில் அது ஆயிரத்துக்கு பத்து (10 / 1000) மட்டுமே ஆகும். இவ்வரசின் சுகாதாரத்துறை பற்றிய முக்கிய குறியீடுகள் மிகவும் பாராட்டத்தக்கதாக உள்ளன. 41,480 மகப்பேறுகளில் 99.98 விழுக்காடு மருத்துவமனைகளிலேயே நடைபெறுகிறது. புதுச்சேரி ராஜீவ் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் மகப்பேறுக்கான தொடர் கண்காணிப்பு மையம் (DEIC) தொடங்கப்பட்டுள்ளது. பெண்களிடையே காணப்படும் இரத்தசோகை நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கு தொடக்கநிலை சுகாதார

நிலையங்களிலேயே இரும்புத்தாது சத்து சுக்ரோஸ் ஊசி (Iron Sucrose Injection) அளிக்கப்படுகின்றது. புதுச்சேரியில் மிகவும் ஊட்டச்சத்துக் குறைபாடு மிக்க 5 வயதுக்கு குறைவான குழந்தைகளின் வீதம் 0.02 விழுக்காடு மட்டுமே ஆகும். மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடு உடைய குழந்தைகளின் வீதம் 0.1 விழுக்காடு ஆகும்.

**31.** எச்.ஐ.வி. நோய் பாதிப்பு மிகக்குறைவாக உள்ள மாநிலங்களில் இவ்வாட்சிப்பரப்பு முதல் இடத்தில் உள்ளது. நாட்டின் எச்.ஐ.வி. நோய் பாதிப்பு வீதமானது 2.69 விழுக்காடு ஆகும். ஆனால், புதுச்சேரியில் அது 0.2 விழுக்காடு மட்டுமே ஆகும். 2017ஆம் ஆண்டு தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்தால் (NACO) எடுக்கப்பட்ட பேறுகாலத்திற்கு முந்திய பெண்களுக்கான எச்.ஐ.வி. கணக்கெடுப்பின்படி புதுச்சேரியில் யாருக்கும் எச்.ஐ.வி. பரவியிருக்கவில்லை என்பது முக்கியமான சாதனையாகும்.

**32.** இரண்டு 500 mA உயர் அதிர்வெண் கொண்ட X-கதிர் கருவிகள், காது, மூக்கு, தொண்டை (ENT) துறைக்கு மேனிலை GI காணொளி அகநோக்கியல் கருவிகள் மற்றும் அறுவை சிகிச்சை துறைக்கு பெருங்குடல் அகநோக்குக் கருவி ஆகியவை இந்திரா காந்தி அரசு மருத்துவமனைக்கு புதிதாக

வாங்கப்பட்டுள்ளன. மருந்தியல் துறையில் 4 ஆராய்ச்சி மாணவர் சேர்க்கை அளவுடன் கூடிய முனைவர் பட்டப்படிப்பு (Ph.D.) தொடங்கப்பட்டுள்ளது. 108 ஆம்புலன்ஸ் சேவை ஏனாமில் தொடங்கப்பட்டுள்ளது. 300 mA உயர் அதிர்வெண் கொண்ட X-கதிர் கருவி, CT ஸ்கேன் / AMC CT ஸ்கேன் ஆகியவற்றுக்காக படச் செயலிகள், 2 ECG இயந்திரங்கள் போன்ற மருத்துவக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. அனைத்து வார்டுகளுக்கும் மற்றும் அறுவை சிகிச்சை கூடத்திற்கும் ஆக்சிஜன் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**33.** மருத்துவமனையில், நோய்த் தொற்று கண்காணிப்புப் பிரிவு (HAI) தொடங்கப்பட்டுள்ளது. பாலினச் சோதனைத் தடுப்புச் சட்டத்தை உறுதியாக அமுல்படுத்த, ஸ்கேன் மையங்கள், மலட்டுத்தன்மை சிகிச்சை மருத்துவமனைகள், கல்லூரிகள், தனியார் மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளை ஆய்வு செய்வதற்கும் மேற்பார்வை இடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 50 மாணவர்கள் சேர்க்கை அளவைக் கொண்ட உலகத்தரத்திலான புதிய பாடத்திட்ட அடிப்படையில், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையின் மருத்துவக் கல்லூரி கிளை ஒன்று காரைக்காலில் தொடங்கப்பட்டுள்ளது. இங்குள்ள 50 MBBS இடங்களில் இவ்வாட்சிப்பரப்புக்கு 14 இடங்கள்

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர மாதத்தின் ஒன்றுவிட்ட சனிக்கிழமைகளில் காரைக்கால் பொது மருத்துவமனை வளாகத்தில் ஜிப்மர் கிளை மருத்துவமனை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**தொழிலாளர்**

**34.** அரசு தொழிலாளர் நலன் மீது தனி கவனம் செலுத்தி அவர்களுக்கு நல்ல வேலைச்சூழலை உருவாக்கியுள்ளது. மேலும், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தியுள்ளது. தொழில் செய்வதை எளிமையாக்கும் விதமாக, திறனை அடிப்படையாகக் கொண்டு, தொழிற்சாலையை தொடங்குவதற்கான திட்ட ஒப்புதல் மற்றும் உரிமம் அளித்தல் ஆகியவற்றை இணைய தளம் வாயிலாக செய்து தருகிறது.

**35.** பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் மற்றும் வேலைவாய்ப்பு கண்காட்சி மூலமாக 1,260 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. கட்டிட மற்றும் கட்டுமான பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் மகப்பேறு நிதி உதவி ₹ 3,000லிருந்து ₹ 5,000ஆகவும், திருமண உதவித்தொகை ₹ 5,000லிருந்து ₹ 7,000ஆகவும், ஈமச்சடங்கு உதவித்தொகை ₹ 5,000லிருந்து ₹ 7,000ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

அவர்கள் இயற்கையாக மரணமடையும் பட்சத்தில் அவர்களுக்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) மூலமாக அளிக்கப்பட்டுவரும் ₹ 30,000 நிதி உதவிக்கும் கூடுதலாக ₹ 70,000 நிதி உதவி அளித்து வருகிறது. கட்டட தொழிலாளர்கள் மற்றும் அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கு பண்டிகைகால பணப்பயனாக ₹ 10 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

**காவல்**

**36.** சமுதாயத்தை குற்றவாளிகளிடமிருந்து பாதுகாக்கும் பொருட்டு, இந்த அரசு நவீன அறிவியல் கருவிகளை காவல் துறையின் ஒருங்கிணைந்த பகுதியாக அறிமுகப்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தை செயல்படுத்துவதன் ஒரு பகுதியாக மாநில குற்றப்பதிவேடுகள் பிரிவு (SCRB), தேசிய குற்றப் பதிவேடுகள் பிரிவு (NCRB), ஆகியவற்றுடன் அனைத்து காவல் நிலையங்களையும் இணைக்கும் “குற்றம் மற்றும் குற்றவாளிகளைத் தடங்காணும் வலைப்பின்னல் மற்றும் அமைப்புமுறை”, ₹ 10 கோடி செலவில் இவ்வாட்சிப்பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் காணும் வகையில் குடிமக்கள் காவலர் இணையதளம் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

**37.** புதுச்சேரி, கோரிமேட்டில் காவலர் பயிற்சி பள்ளியில் பயிற்சி மேற்கொண்டிருக்கும் மற்றும் புதுச்சேரி ஆயுதப்படை பிரிவில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் காவலர்களுக்காக ₹ 2 கோடி செலவில் புதுச்சேரி கோரிமேட்டில் முழுமையான வசதியுடன்கூடிய உள்ளரங்க உடற்பயிற்சி மையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கடற்கரைப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக ₹ 2 கோடி செலவில் மைய காவல் நிலையம் மற்றும் படகுத்துறை கட்டும் பணி நிறைவடைந்துள்ளது.

**பொதுப்பணி**

**38.** சாலைகள் மற்றும் பாலங்கள் பிரிவில் பொதுப்பணித்துறையின்கீழ் ₹ 19 கோடி செலவில் 6 பணிகள் செய்து முடிக்கப்பட்டன. அதில் இந்திரா காந்தி சதுக்கம் முதல் அரியூர் வரை ₹ 12 கோடி செலவில் தேசிய நெடுஞ்சாலை (45A)வை பலப்படுத்தும் பணியும் அடங்கும். குடிநீர் வழங்கல் அமைப்பு முறையை அதிகரிக்கும் வகையில், சேதராப்பட்டு கிராமம் (₹ 3 கோடி), வம்புப்பட்டு கிராமம் (₹ 1 கோடி), கூனிச்சம்பட்டு கிராமம் (₹ 2 கோடி), கரையாம்புத்தூர் கிராமம் (₹ 2 கோடி) ஆகிய 4 பகுதிகளில் குடிநீர் வழங்கல் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரி மண்ணாடிப்பட்டு கொம்யூன், செல்லிப்பட்டு கிராமம், பம்பை ஆற்று சந்திப்பில், பம்பை ஆற்றுக்கு குறுக்கே படுகை அணை மற்றும் பாலம் ₹ 3 கோடி

செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், ₹ 158 கோடி செலவில் இவ்வாட்சிப்பரப்பின் 4 வட்டாரப் பகுதிகளிலும் 15 உள்கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், புதுச்சேரி அரசு, பிரான்சு மேம்பாட்டு முகமையின் (AFD) உதவியுடன் குடிநீர் வழங்கல் திட்டத்தை தொடங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. 100 அடி சாலையில் உழந்தைகீரைப்பாளையம் பகுதியில் ₹ 35 கோடியில் மேம்பாலப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**வருவாய்**

**39.** ஏழைக் குடும்பங்களுக்கான இராஜீவ் காந்தி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ₹ 6 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கான சேவையை அளிக்கும் பொருட்டு புதுச்சேரி மற்றும் உழவர்கரை துணைப் பதிவகங்களில் தகவல் தொழில்நுட்பமானது அறிமுகப்படுத்தப்பட்டு, வில்லங்கச் சான்றிதழ்களை இணையதளம் வாயிலாகப் பெறுவதற்கு ஏற்ப தகவல் கணினிமயமாக்கல் பதிவேடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**தொழில்கள்**

**40.** புதிய தொழில் முனைவோர்களுக்கு எளிய வழிகாட்டு நெறிமுறைகளும், 30 நாட்களுக்குள் தடையின்மைச் சான்றிதழும் அளிப்பதை உறுதி செய்வதற்காக, இந்த அரசால்

2016ஆம் ஆண்டு புதிய தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்டது. தொழிற்சாலை மேம்பாடானது இவ்வாட்சிப்பரப்பில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமின்றி சமூகப் பொருளாதார மேம்பாட்டினையும் உருவாக்குகிறது. “தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு தொழில் முனைவோர்களை ஊக்குவித்தல் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளித்தல்” என்னும் திட்டத்தின்கீழ் 27 தொழிற்சாலைகளுக்கு ₹ 3 கோடி அளவுக்கு முதலீட்டு மானியம் அளிக்கப்பட்டுள்ளது. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் பொருட்டு புதுச்சேரி பிள்ளைச்சாவடியில் இயந்திரக் கருவி அறையுடன் தொழில் மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

**41.** இவ்வாட்சிப்பரப்பில் தொழில் முனைவோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களுக்கு வாய்ப்புகளை அளிக்கவும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையை தொடங்குவோம் திட்டத்தை ஊக்குவிப்பதற்காக கல்லூரி மாணவர்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கிடையே “மாணவர் தொழில் முனைவோர் கருத்தளிப்பு போட்டி” நடத்தப்பட்டது. 3 அரசு கல்லூரிகளில் “பிரதம மந்திரி இளைய தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்” (PMYUVA Yojana) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்

மூலம் கணினி வழியாக பதிவுசெய்யப்பட்ட தொழில் முனைவோர்களுக்கு ₹ 15 கோடி முதலீடு செய்யப்பட்டு 747 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு புதிய தொழில் கொள்கை கொண்டுவரப்பட்டதிலிருந்து ₹ 178 கோடி முதலீட்டுக்கான தொழிற்திட்டங்களுக்கு தடையின்மைச் சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

**42.** பிப்டிக் (PIPDIC) நிறுவனமானது ₹ 620 கோடி செயற்குறிப்பிலான முதலீட்டில் 121 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து 183 ஏக்கர் நிலம், 17 தொழிற்கூடங்கள் மற்றும் 7 தொழில் மனைகளை ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் 2,440 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும். 108 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்குடன் 14 தொழிற்சாலைகளுக்கு ₹ 4 கோடி அளவுக்கு பருவகால கடனாக நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு பயிற்சி உதவித்தொகையுடன் கூடிய வெவ்வேறு திட்டங்கள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு ₹ 61 இலட்சம் செலவில் 914 வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சியின் மூலம் 196 அட்டவணை இனத்தவரும் பயன்பெற்றுள்ளனர். பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின் (PMEGP) கீழ் 27 தொழில்

முனைவோர்களுக்கு ₹ 51 இலட்சம் மானியத்துடன் வெவ்வேறு வங்கிகளின் மூலம் ₹ 144 இலட்சம் கடன் அளிக்கப்பட்டுள்ளது. சுய வேலைவாய்ப்பு தொழில் நிறுவனங்கள் தொடங்குவதற்கு "வேலை வாய்ப்பு இல்லா இளைஞர்களுக்கு சுய தொழில் தொடங்க ஊக்குவித்தல்" திட்டத்தின்கீழ் (MUPSES) 231 தொழில் முனைவோர்களுக்கு ₹ 57 இலட்சம் மானியத்துடன் வெவ்வேறு வங்கிகளின் மூலம் ₹ 243 இலட்சம் கடன் அளிக்கப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி நிர்வாகம்**

**43.** இந்த அரசின் விடாமுயற்சியின் காரணமாக 2017ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் புதுச்சேரி நகராட்சி பொலிவுறு நகரமாக மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது என்பதை தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த பொலிவுறு நகரத் திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு "புதுச்சேரி பொலிவுறு நகரக்கழகம்" என்ற ஒரு தனி நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசால் நடப்பு நிதியாண்டில் ₹ 98 கோடி வழங்கப்பட்டுள்ளது. சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் (MLA-LAD), சமுதாய நலக்கூடங்கள், கழிப்பிட தொகுப்பு கட்டடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள் ஆகியவற்றைக் கட்டுதல் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் உள்ளிட்ட

பல்வேறு கட்டடப் பணிகள் ₹ 30 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் நகராட்சி பகுதிகளில் துப்புரவு மற்றும் குப்பை அகற்றும் பணிகளுக்காக ₹ 27 கோடி வழங்கப்பட்டுள்ளது. தூய்மை இந்திய திட்டத்தை செயல்படுத்துவதற்காக ₹ 6 கோடி செலவிடப்பட்டுள்ளது. தூய்மையான மற்றும் சுகாதாரமான புதுச்சேரியை பராமரிக்கும் பொருட்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளைச் செயல்படுத்த அரசு முனைப்புடன் உள்ளது. மாஹே மற்றும் ஏனாம் பகுதிகள் திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

**ஊரக மேம்பாடு**

**44.** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின்கீழ் (MGNREGA) ₹ 13 கோடி செலவில் 519 வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இவ்வேலைகள் 31,576 குடும்பங்களை உள்ளடக்கி 6 இலட்சம் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. 26,623 குடும்பங்கள் மூலம் 2,223 சுய உதவிக்குழுக்கள் (SHGs) மற்றும் 95 பஞ்சாயத்து நிலையிலான கூட்டமைப்புகள் (PLF) உருவாக்கப்பட்டுள்ளன. “தூய்மை இந்தியா” திட்டத்தின் (Gramin) கீழ் ₹ 11 கோடி செலவில் 6,361 கழிப்பிடங்கள் பயனாளிகளால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதுதவிர

9,921 கழிப்பிடங்கள் தற்போது பயனாளிகளால் கட்டப்பட்டு வருகின்றன. புதுச்சேரி பகுதியில் 22 கிராமங்களை உள்ளடக்கிய பதினான்கு கிராம பஞ்சாயத்துக்கள் திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத பஞ்சாயத்துகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் முழு ஒத்துழைப்புடன் இந்த திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**ஆதிதிராவிடர் நலம்**

**45.** புதுச்சேரி மாநிலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவரின் சமூக பொருளாதார மற்றும் கல்வித்தகுதிகளை மேம்படுத்துவதற்காக இவ்வரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த நிதியாண்டில் ஆதிதிராவிடர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ₹ 144 கோடியில் 23 நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில் சாலை வசதி, குடிநீர், கழிவுநீர் வடிகால், சமூக கழிப்பறைக் கூடங்கள், மின்வசதி ஆகிய அடிப்படை வசதிகள் செய்வதற்காக ₹ 24 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அட்டவணை இன மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும், பயிற்சித் திட்டம் மற்றும் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கவும் 23,302 பயனாளிகளுக்கு ₹ 25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**சமூக நலம்**

**46.** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி அதன் மக்களின் மேம்பட்ட நலவாழ்வில் அமைந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இந்த அரசு, முதியோர்கள் மற்றும் மாற்று திறனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நிதி உதவி மற்றும் தேவையான உபகரணங்களையும் அரசு வழங்கிவருகிறது. குழந்தைகள் பாதுகாப்புக்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

**47.** தொழிற்சாலைகள் மூலம் ஏற்படும் மாசுகளைக் குறைக்கும் நடவடிக்கையாக, தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் காற்று மாசுபாட்டின் அளவு மற்றும் தரத்தைக் கண்காணிப்பதற்காக எட்டு தொழிற்சாலைகளில் “தொடர் உடனடி மாசுக்கண்காணிப்பு இயந்திரம்” பொருத்தப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் நிறுவ மற்றும் செயல்படத் தொடங்குவதற்காக ஒப்புதல் தருவதற்கு இணையதள மேலாண்மை அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. திடக்கழிவுகளிலிருந்து எரிவாயு

உற்பத்தி செய்வதற்காக புதுச்சேரி மற்றும் காரைக்கால் நகராட்சி ஒவ்வொன்றுக்கும் ₹ 20 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் உள்ளடங்கிய மற்றும் சமூகம் சார்ந்த விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகள் ₹ 7 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளன.

**நில அளவை**

**48.** கணினிமூலம் நில அளவைப் பதிவேடுகள் மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ், காரைக்கால் பகுதியில் பொதுச்சேவை மையங்கள் மூலமாகப் களநிலப்படங்கள் பெறும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

**49.** மத்திய அரசின் முன்னோடித் திட்டமான "உள்நாட்டு சுற்றுலா" (சுதேசி தர்ஷன்) திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் "பாரம்பரியச் சுற்றுலா" மற்றும் "ஆன்மீகச் சுற்றுலா" ஆகிய திட்டங்களுக்கு முறையே ₹ 66 கோடி மற்றும் ₹ 41 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் மற்றும் மாஹே பகுதிகளில் உள்ள பாரம்பரியச் சின்னங்களைப் பாதுகாக்கவும், ஆன்மீகத்திற்கு பெருமை சேர்க்கவும் மற்றும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் இத்திட்டம்

பெரிதும் உதவும். புதுச்சேரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 9.5 விழுக்காடு உயர்ந்துள்ளது.

**50.** புதுச்சேரி அரசு, பிரெஞ்சு தூதரகம் மற்றும் புதுச்சேரி கடற்பயண சங்கமும் இணைந்து நடத்திய "போன்சூர் இந்தியா" திருவிழாவின் ஒரு பகுதியாக புதுச்சேரியில் முதன்முறையாக சர்வதேசப் பாய்மரப் படகுப்போட்டி நடத்தப்பட்டது. சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, சுற்றுலாவின் முக்கிய அம்சங்களை விளக்கும் வகையில் "சுற்றுலாத் திருவிழா" (PARYATAN PARV) ஒரு வாரத்திற்கு கொண்டாடப்பட்டது.

**51.** 24வது அகில உலக யோகா திருவிழா மற்றும் 3வது சர்வதேச யோகா தினம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வேல்ராம்பட்டு ஏரி மற்றும் கணகன் ஏரிகள் புனரமைக்கப்பட்டு சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்பட்டு பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் உருவாக்கித் தரப்பட்டுள்ளன. "ஒரே இந்தியா உயர்ந்த இந்தியா" (EK BHARAT SHRESHTHA BHARAT) என்ற திட்டத்தின்கீழ் டாமன் மற்றும் டையு (Daman and Diu) யூனியன் பிரதேசத்திற்கும், புதுச்சேரிக்கும் இடையே கலாச்சாரப் பரிமாற்ற நிகழ்ச்சி நடைபெற்றது. உலக சுற்றுலா தினம், பாரம்பரிய மகிழுந்து

அணிவகுப்பு, புதுச்சேரி விடுதலை நாள், ஏனாம் மக்கள் கலைவிழா போன்ற விழாக்கள் சுற்றுலாத்துறை மூலம் கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட முக்கிய விழாக்களாகும்.

**52.** 2017ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் புதுச்சேரி விமான நிலையத்திலிருந்து புதுச்சேரி-ஹைதராபாத் பிரிவில் விமான சேவை தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதுச்சேரி-பெங்களூருக்குமிடையே விமான சேவை தொடங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி விமான நிலைய விரிவாக்கத்திற்குத் தேவையான தமிழ்நாடு பகுதியில் உள்ள நிலங்களைப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொண்டு வருகிறது.

**நகர மற்றும் கிராமப்புற திட்டமிடல்**

**53.** "பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீடுகட்டும் திட்டத்தின்"கீழ் 516 வீடற்ற ஏழைகளுக்கு வீடுகள் கட்ட ₹ 3 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், "பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்" கீழ், (PMAY) பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய வீடு கட்டும் திட்டத்தில் முதற்கட்டமாக 2,468 பயனாளிகளுக்கு ₹ 28 கோடி நிதி உதவி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசின் திட்டத்தின்கீழ் 7,666 வீடுகள் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்**

**54.** 1,745 பிற்படுத்தப்பட்ட மாணவ-மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 32 பிற்படுத்தப்பட்ட மாணவ-மாணவியருக்கு "தியாகி வ. சுப்பையா விருது" மற்றும் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த தவில் மற்றும் நாதஸ்வர இசைக்கலைஞர்களுக்கு இலவச இசைக்கருவிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் நலனுக்காக புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் 5 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 225 மாணவர்கள் தங்கியுள்ளனர். சிறுபான்மை மாணவர்களுக்கு ₹ 77 இலட்சம் கல்வி உதவித்தொகை நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு**

**55.** வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் விதவைகளின் மகள் திருமணத்திற்கும், எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் பெயரில் தேசிய சேமிப்புப்

பத்திரமும், மேலும் குடும்பக்கட்டுப்பாடு செய்துகொண்ட ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படுகிறது.

**56.** முதியோர் ஓய்வூதியத் திட்டம் இவ்வரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதியோர்கள், விதவைகள், மிகவும் ஏழ்மை நிலையிலுள்ளவர்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க ஆக மொத்தம் 1.44 இலட்சம் பயனாளிகளுக்கு இவ்வரசு ₹ 330 கோடி செலவு செய்துள்ளது. 855 அங்கன்வாடி மையங்கள் மூலம் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைத் திட்டத்தின்கீழ் ஆண்டு முழுவதும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துணவு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ₹ 15 கோடி செலவிடப்பட்டு 28,200 குழந்தைகள் மற்றும் 9,500 தாய்மார்கள் பயன்பெற்றனர். முதல் குழந்தை பெற்ற / கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு “பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா” திட்டத்தின்கீழ் அவர்கள் வங்கிக்கணக்கில் நேரடியாக ₹ 5,000 செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை ₹ 13 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**57.** கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சி, சுற்றுலா மேம்பாடு, கட்டுமான வசதிகள், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் மக்களின் தரமான வாழ்க்கை வழங்குதல் ஆகியவை எனது அரசின் முன்னுரிமை ஆகும்.

**58.** இக்கூட்டத்தொடரில் தங்களின் கலந்தாய்வு விவாதங்கள் வெற்றிபெற நான் உங்களை வாழ்த்துகிறேன்.

*நன்றி !*

*ஜெய்ஹிந்த் !!*

தூய்மை-இந்தியா

பசுமை-புதுச்சேரி

அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009